பக்கங்கள் 8 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 12-11-61 | ஞாயிறு | இதழ் 22

## 'போட்டித் தபால்அதிகாரி' செல்வநாயகம் அவர்கள் மீதும் வழக்கு?

கச்சேரி முன்பு மறியல் செய்ததாகத் தடை செய்யப்பட்ட தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் மீது பொலிசார் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்களல்லவா? திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தாயகத்திற்குத் திரும்பி வந்திருப்பதனால் அவருக்கெதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என்று தமிழ் அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. மற்றவர்களைப்போலன்றி அரசாங்கத்தை எதிர்த்துப் 'போட்டித் தபால் அதிகாரி'யாகக் கடமையாற்றியது இவர் செய்த குற்றமாக இருக்குமென்று பேசிக்கொள்ளப்படுகிறது.

### யாழ்ப்பாணப் பகுதியிலும்

# பொலீஸ்வேட்டை

## இந்திய வம்சவளியினர்மீது திடீர் பாய்ச்சல்!

சென்ற 6-11-61 அதிகாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரு வீட்டுக்கு சுமார் பதினைந்து பொலிஸ் வீரர்கள் வந்து குதித்தார்கள். அந்த வீட்டிலிருந்த ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் அத்தனைபேரையும் உடனடியாக பொலிஸ் வானில் ஏறும்படி கட்டளையிட்டார்கள். நியாயம்கேட்கவோ, விபரம் சொல்லவோகூட அவகாசம் அளிக்கப்படவில்லை. ஒருவர் ஏதோ நியாயம் சொல்ல முற்பட்டபோது "பேசாமல் ஏறு ஒய்!" என்று கைப்பொல்லை உயர்த்தினாராம் ஒரு வீரர்!

யுத்தகாலக் கைதிகளைப்போல இந்த இருபத்திமூன்று மக்களையும் பொலிஸ் நிலையத்தில் கொண்டுபோய் அடைத்து வைத்தார்கள். வெளியிலிருந்து உதவி கோருவதற்கு டெலிபோனை உபயோகிக்கும் வசதிகூட இவர்களுக்கு மறுக்கப்பட்டது.

இத்தனைக்கும் இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? பயங்கரப் படுகொலை செய்தார்களா? கொள்ளையடித்தார்களா? சதிவேலையில் ஈடுபட்டார்களா? அல்லது கள்ளத்தோணியில் வந்து இறங்கினார்களா? எதுவுமில்லை — கள்ளத் தோணியில் வந்ததாகப் பொலீசார் சந்தேகப்பட்டார்கள். அவ்வளவுதான்!

ஆனால் இவர்களோ மிக நீண்டகாலமாக யாழ்ப்பாணத்திலேயே வசிப்பவர்கள். இங்கேயே தொழில் செய்பவர்கள். இங்கேயே படிப்பவர்கள். இவர்களிடம் அரிசிக் கூப்பன் புத்தகங்களுண்டு. இங்கே வசித்ததற்கு வேறுபல அத்தாட்சிகளுண்டு.

இந்த அத்தாட்சிகளையெல்லாம் முதலில் பொலீசார் கேட்கவில்லை. ஆனால் இவற்றையெல்லாம் விட முக்கியமான ஒரு அத்தாட்சியைக் கேட்டார்கள். அது இருந்தால் உடனே விட்டு விடலாமென்றார்கள்.

"சிங்களம் பேசத் தெரியுமா? அப்படியானால் உடனே விட்டு விடலாம்" என்று சொன்னாராம் ஒரு பொலீஸ் அதிகாரி! இந்த நாட்டில் வசிப்பவர் என்பதற்கு முக்கியமான அத்தாட்சி சிங்களம் தெரிந்திருப்பதுதானும்!

இந்த இருபத்தி மூன்று 'கைதி'களும் அன்று இரவு 10-30 மணிக்குத் தான் வெளியேவர முடிந்தது!

இந்துக்களின் முக்கிய பண்டிகையான தீபாவளித் தினத்தின் போது, ஒரு குற்றமும் செய்யாத 23 மக்கள் பொலீஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டுக் கிடந்தார்கள்!

"கள்ளக். குடியேற்றம் நிச்சயம் தடுக்கப்படவேண்டியதே! ஆனால் அதன் பெயரால் ஒரு குற்றமும் அறியாத ஏழைமக்களை இம்சைப்படுத்துவது மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்ட செயலாகும். சந்தேகத்துக் குரியவர்களென்று கருதப்பட்டால், அவர்களுடைய இருப்பிடத்தில் வைத்துச் சந்தேகத்தைத் தீர்த்திருக்கலாம். அந்தப்பகுதிவிதானையை அழைத்து வந்துஉண்மையை அறிந்திருக்கலாம் அதைவிட்டு, வீட்டிலுள்ள அத்தனைபேரையும் அள்ளிப் போட்டுக்கொண்டுபொலீஸ் நிலையம் போவதும்,அங்கே அடைத்து வைத்திருந்து ஆறித் தேறித்திறந்து விடுவதும்அநியாயம்!— இந்த நிலை'அடையாளக் காட்' வரும்வரையும் இல்ங்கைத் தமிழர்களுக்கும் எந்த நிமிஷத்திலும் ஆபத்தைத் தரலாம்!— எங்கள் பிரதிநிதிகள், தலைவர்கள் களைத்துப் போய் விட்டார்களா? இப்படியான பரிதாபத்துக்குரிய நிகழ்ச்சிகள் நடவாமல் தடுப்பதற்கு அவர்கள் உடனடியாக ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்"—இவ்வாறு இச்சம்பவம் குறித்து அபிப்பிராயம் தெரிவித்த ஒரு பெரியார் நமது நிருபரிடம் கூறினர். ●

### தீபாவளிக் கொண்டாட்டம்!



ஆட்சியாளர் 'சட்டம்' என்னும் சிகரட்டைப் பற்ற வைத்துவிட்டு, எதிர்காலக் கன்னியை நினைந்து மகிழ்ந்து போயிருக்கிறார்கள்! சட்டத்தை அமுல் நடத்துபவர்களோ..................?

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**12-11-61 முதல் 18-11-61 வரை**

**மேடம்:** பிதாவுக்குச் சுகவீனம் ஏற்படும். அல்லது பிதாவழி பந்துக்களால் கஷ்டங்கள் தொடரும். குடும்பச்சூழலிலும் அமைதிநிலவாது. ஆனால் தொழிலைப் பொறுத்தளவில் முன்னேற்றங்காணலாம்.

**இடபம்:** ஞாயிறு, திங்கள் வாரங்களை அவதானமாகச் செலவிடவும். மிகுதி நாட்கள் நன்மை பயக்கும். தொழில் விஷயங்களில் முன்னேற்றமுண்டு. ஆனால் குடும்பத்தில் சிறுசச்சரவுகளும் தேகசுகவீனமும் ஏற்படும்.

**மிதுனம்:** வாரத்தில் முதல் பகுதியில் பல சச்சரவுகள்ஏற்படும். மனதில் அமைதி நிலவாது. திங்கள் இரவு, செவ்வாய், புதன் வாரங்களை அவதானமாகச் செலவிடவும். மிகுதி நாட்களில்தொழிலில் முன்னேற்றமும், பொருள் விருத்தியும் உண்டாம்.

**கடகம்:** உங்கள் சொந்தவிஷயங்களில் முன்னேற்றம் தடைப்படும். குடும்பச் சச்சரவுகளும் ஏற்படும். தேகசுகம் பாதிக்கப்படும். வயிற்றுக் கோளாறுகள் காணப்படுகின்றன. புதன் இரவு, வியாழன், வெள்ளி வாரங்களை அவதானமாகச் செலவிடவும். வார இறுதியில் நன்மைகளுண்டு.

**சிங்கம்:** இளையசகோதரரால் பல உதவியுண்டு. ஆனால்மாதாவழிபந்துக்களால் சங்கடங்கள் ஏற்படலாம். மறைமுகமான சத்துருக்களும் தொல்லை விளைவிப்பார்கள். வெள்ளி இரவு, சனி வாரங்களை அவதானமாக செலவிடவும்.

**கன்னி:** பொருள் நிலையில் விசேஷ அபிவிருத்தி உண்டு, முன்முதலீடு செய்தவற்றால் பல லாபங்கள் கிட்டும். பூமிப் பலிதமும் உண்டு. ஆனால் தேகசுகம்சிறிது பாதிக்கப்படும்.

**துலாம்:** சுமுகமான முறையில் கருமங்களைச் சாதிக்கமுடியும். கமத்தொழில்களில் முன்னேற்றமுண்டு. பொருள் விருத்தியும் ஏற்படும். ஆனால் வேலைகள் அதிகமாக இருக்கும். வாகனாதிகளால் கஸ்டமுண்டு,

**விருச்சிகம்:** சச்சரவுகள் அதிமாக நண்பர்களுடனும் உறவினர்களுடனும் அபிப்பிராய பேதங்கள் ஏற்படலாம். தேகசுகமும் பாதிக்கப்படும். பிதாவழி பந்துக்களுடன் அவதானமாக நடக்கவும்.

**தனுசு:** நண்பர்களால் உதவியுண்டு. தொழிலிலும் பலவித முன்னேற்றமுண்டு. பழைய முதலீடுகளால் நன்மையுண்டு. ஆனால் தேகசுகவீனம் உண்டு. கண்ணில் சுகவீனம் காணப்படலாம்

**மகரம்:** குடும்ப சூழ்நிலை சுமுகமாக இராது. உடல் நிலையும் பாதிக்கப்படும். ஆனால் வார பிற்பகுதியில் தொழில் முன்னேற்றமுண்டு. நண்பர்களால் பலவித உதவியுண்டு.

**கும்பம்:** உங்கள் விஷயங்களில் பலவித முன்னேற்றம் காணப்படுகிறது. சத்துருக்களின் எதிர்ப்பைச் சமாளித்து எடுத்த கருமங்களில் வெற்றி பெற இடமுண்டு. பொருள் விருத்தியும் உண்டு. ஆனால் இனத்தவர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**மீனம்:** சிநேகிதர்களால் பலவித உதவியுண்டு. தொழிலிலும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனால் தேகசுகவீனம் தொடர்ந்து காணப்படுகிறது. பிதாவழிக் கஷ்டமுண்டு.


### சோதிடம்

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினால் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினால் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.







# கண்டதும்... கேட்டதும்...

### சமய, கலாசார மறுமலர்ச்சி.

இன்றைக்கு கால் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கைத் தமிழராகிய எங்களுக்குத் தலைத்தீபாவளி என்றால் என்னவென்பதே தெரியாது. தமிழ்நாட்டு பத்திரிகைகளையும் சினிமாக்களையும் படித்ததன் பயனாகவும் பார்த்ததன் விளைவாகவும் இப்பொழுது நம்மில் அனேகருக்கு தலைத்தீபாவளி என்றால் என்னவென்பது தெரிந்திருக்கிறது. ஆனால் அனுபவித்தது கிடையாது. இளவட்டங்களுக்கு அதை அனுபவிக்க ஆசை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் பெண்ணைப் பெற்றவர்களுக்கு தலைத்தீபாவளி அவ்வளவு ரசமானதாயில்லை.

அன்று இலங்கையில் தீபாவளிஎன்பது கோடிஉடுத்துகோழி அறுப்பதாக இருந்தது. இன்று பட்சணங்கள் செய்து பட்டாசுகொழுத்துமளவுக்கு வளர்ந்திருக்கின்றது. நம்மவர்களுக்கு இப்படித் திடீரென்று ஞானோதயமான காரணமென்ன? சொழியன் குடுமி சும்மா ஆடுமா? நாடு சுதந்திரமடைந்த பிறகு சிங்களச் சகோதரர்கள் ஒரு பௌர்ணமி தவறாமல் 'சில்' அனுஸ்டித்து வருகிறார்களல்லவா? அது ஏன்? பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் திரிந்து, மறைந்துபோன தங்களின் சமய அனுஷ்டானங்களையும் கலாசாரத்தையும் மறுபடியும் உயிர்ப்பிக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். தமிழராகிய எங்களுக்கு சமயப் பற்று இல்லாமல் போய்விடுமா? இந்தியாவில் பேணிக் காத்து வளர்க்கப்படும் மத அனுஷ்டானங்களையும் தமிழ்க் கலாசாரங்களையும் நாமும் கைக்கொள்வது நல்லதுதானே!

தீபாவளியைத் கொண்டாடக் கூடாது, அதை துக்கதினமாக அனுஷ்டிக்கவேண்டுமென்று ஒரு சாரார் கூப்பாடு போடுகின்றார்கள். திராவிடன் ஒருவனை வடநாட்டான் கொன்ற தினத்தை தமிழர் எப்படித் திருநாளாகக் கொண்டாடலாமென்று அவர்கள் கேட்கிறார்கள். அவர்களின் கூற்று நியாயமானதாயிருக் கலாம். ஆனால் நம் முன்னோர்கள் வகுத்த வழியில் செல்லவேண்டியது நம்கடமையாக இருக்கும்போது வடநாட்டான் தென்நாட்டான் என்று பார்க்க முடியுமா? தமிழர் பண்டிகை என்பதற்காக அரசாங்கம் தீபாவளித் தினத்தை விடுமுறை நாளாக்கியிருக்கும்போது நாங்கள் தீபாவளியைக் கொண்டாடாமல் இருக்க முடியுமா?

### தமிழர் நாகரிகம்.

தமிழர் நாகரிகம் மிகவும் புராதனமானது, ரொம்பவும் வியாபகமானது என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இன்று உலகில் ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு ஜாதியும் இப்படியேதான் சொல்லிக்கொண்டிருக்கிறது. தற்புகழ்ச்சி தலைவிரித்தாடும் இந்த யுகத்தில் தமிழர் நாகரிகம் பெருமை வாய்ந்ததென்பதை நம்புவது சிரமமாயினும், தமிழர்கள் ஒரு காலத்தில் நாகரிகத்தின் சிகரத்தில் இருந்தார்கள் என்பதற்கு இன்றும் எத்தனையோ சான்றுகள் இருக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடிமையாகியிருந்த காலத்தில் கூட தமிழ் நாட்டவர்கள் தங்களுடைய நாகரிகத்தைத் துறந்து வெள்ளையரின் நாகரிகத்தைத் தத்தெடுக்கவில்லையென்பதை இன்றைய தமிழ் நாட்டைக்கொண்டே நாம் தெரிந்து கொள்ளலாம். தமிழர் நாடு குறிப்பாக சமயத் துறையில், முன்னேறாவிட்டாலும் பின்வாங்கவில்லையென்று சொல்லலாம்.

இலங்கைத் தமிழர்களாகிய நமது நிலைமை வேறு. தமிழ் நாட்டிலிருந்து பிரிந்து வாழ்ந்த தோஷத்தினால் நாங்கள் சமயத்தையும் மொழியையும் மறந்து அடிமை வாழ்வில் அமுங்கிக்கிடந்துவிட்டோம். தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள கோயில்கள், நம் முன்னோர்கள் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர்களாயிருந்தார்களென்பதைப் பறைசாற்றுகின்றன. ஆனால் இக்காலத்தவர்களோ சாமியாவது பூதமாவதென்று நையாண்டிபண்ணுகிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் தங்களின் பரம்பரைப் பண்பாட்டை மறந்து போனதுதான். நம்மவர்கள்மதபக்தியை இழந்ததோடு, அவர்களின் பண்பாடு, கலாசாரம் முதலிய சகலதையும் இழந்து நிற்கிறார்கள்.

—'மாயாவி'

# பொலீஸ்காரிமீது 'கண்' வைக்கும் காரோட்டிகள்!

## பாதசாரிகளின் பீதி!

கொழும்பு கோட்டையின் பிரதான வீதிகளில் வாகனப் போக்குவரத்தை சீர்படுத்துவதற்காக, இப்பொழுது சில பெண் போலிஸ்காரிகள் கடமையாற்றுவதைக் காணலாம்!

நடு வீதியில் நின்றுகொண்டு, கையைத் தூக்கி, உடலை வளைத்துச் சைகை காட்டும் பெண் போலிஸ்காரிகளின் உடல்சைவு கார்ச் சாரதிக்குப் 'புதுமையாகத் தோன்றுவதால்இப் பொலிஸ்காரிகள் மீது ஒரு கண் வைத்துக் கொண்டே வாகனங்களைச் செலுத்துகின்றார்கள்! இதனால் வாகனப் போக்குவரத்து ஒழுங்காக நடைபெறுவதைவிட்டு, சிலசமயங்களில் விபத்துக்கள் நேரிடக்கூடுமோ என்று பாதசாரிகள் பயப்படவேண்டியிருக்கிறது! ஆனால் பழகப்பழக இது சகஜமாகிவிடலாம்!

இதே நேரத்தில் மற்றொருவிஷயத்தையும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஜப்பானில் உள்ள ப்யூகோகா என்ற நகரத்தில், வாடகை மோட்டார் வண்டிச் சாரதிகள் தங்கள் மனைவிமாரின் புகைப் படங்களை அவர்கள் பார்வைக்குத் தெரியும் விதத்தில், காரோட்டியின் ஆசனத்திற்கு எதிரேயுள்ள கண்ணாடியில் மாட்டி வைத்திருக்க வேண்டும். தங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்களின் நினைவு, கார் ஓட்டிகள் வண்டிகளை மிகவும் கவனமாக ஓட்டுவதற்குப் பயன்படும் என்று கருதியே அங்குள்ள ஒரு வாடகை மோட்டார் கம்பெனி, அவரவர் மனைவியரின் படங்களை அவர்கள் வண்டிகளில் காணக்கூடியதாய் வைக்கும்படி தங்கள் வாடகை மோட்டார் ஸ்தாபனத்தில் கடமையாற்றும் எல்லா கார்ச் சாரதிகளுக்கும் கட்டளையிட்டிருக்கிறது!

# திரை மறைவில்

## சிறைசெல்வார்களா?

தங்கள்மீது யாழ்ப்பாணப்பொலீசார்தொடர்ந்துள்ள வழக்கைப்பற்றி ஆராய்ந்து தமிழ்ப்பிரதிநிதிகள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காகத் தமிழ்ப்பிரதிநிதிகள் விரைவில் சந்திக்கவிருக்கிறார்களாம். எல்லாப் பிரதிநிதிகளும் குற்றத்தை ஒப்புக் கொண்டு தேவையேற்பட்டால் சிறைக்கும் செல்ல வேண்டுமென்று ஒரு சாரார் கருதுகின்றனராம். இந்தக் கருத்துக்கே அதிகம் ஆதரவு இருப்பதாகவும் தெரிகிறதாம்,

## இடமாற்றத்தின் மர்மம் என்ன?

கொழும்பிலுள்ள மத்திய தந்திக் கந்தோரில் வேலைசெய்யும் எட்டு உத்தியோகஸ்தர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதன் மர்மம் என்ன? கொழும்பிலிருந்து அரசியல் வாதியொருவர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பெண்ணுடன் தொலைபேசியில் பேசுவதைக் களவாகக் கேட்ட குற்றத்திற்காக அந்த உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனரா? புகாரைச் செய்தவர் யார்?

## அளவிற்கு மீறிய ஆசை

அமைச்சர் பதவியைக் கேட்டதன் மூலம் அரசியல் வாதிகளின் சிரிப்புக்களாக மாறிவரும் துர்ப்பாக்கியசாலியான அரசியல்வாதி யார்? உதவியமைச்சர் பதவி கேட்டால் அவருக்கு ஒரு வேளை அது கிடைக்கக் கூடுமாம். அளவுக்கு மீறிய ஆசையால் அதிகமாகப் பாய்ந்து மறுபக்கத்திலுள்ள பள்ளத்தில் விழுந்த குதிரைப் பாகனின் கதைதான் எனக்கு ஞாபகம் வருகின்றது.

## அவர்கட்கும் தெரியும்.

அரசாங்கக் கட்சிப் பிரதிநிதிகள் இருவர் பேசிக்கொண்டது, தற்செயலாக என் காதுகளில் விழுந்தது. அவற்றை உங்கள் காதுகளிலும் போட்டு வைக்கிறேன்.

ஒருவர்:— தமிழர் ஒருவருக்குப் பதவி கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரிடையேயாவது செல்வாக்குப் பெற்றிருப்பவருக்குத்தான் பதவி கொடுக்கவேண்டும். அல்பிரட் துரையப்பா தமிழர்களிடையே செல்வாக்கில்லாதவர்.

இன்னொருவர்:— அவரைப் பாவிக்குமட்டும் பாவிக்கவேண்டியதுதான். அவருக்குப் போய் பதவியை யார் கொடுப்பது?

(பேசியவர்கள் இருவரும் சிங்களப் பிரதிநிதிகள்)

## எப்பொழுது வெடிக்குமோ!

இப்பொழுதுள்ள அரசியல் சூழ்நிலை மிகவும் விசித்திரமானதாகக் காட்சியளிக்கின்றது. அரசாங்கம் பெரிய ஒரு வேலை நிறுத்தத்தைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிக்கொண்டே வருகின்றது. அந்த வேலை நிறுத்தத்திற்கு அஞ்சி அரசாங்கம் அவசரகாலச் சட்டம் என்னும் கவசத்திற்குள் பதுங்கிக்கொண்டிருக்கின்றது. அவசரகாலச் சட்டத்தை மீறி வேலை நிறுத்தம் செய்யும் துணிவு தொழிற்சங்கங்களுக்கு இல்லை. இந்தச் சூழ்நிலையில்தான் இன்றைய சமாதானம் நிலவுகின்றது. இந்நிலை நெடுக நீடிக்க முடியாது.

## போராட்டம் பற்றியகருத்து.

தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சியினர் உடனடியாகவே மறுபடியும் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமா என்ற கேள்வியும் சில வட்டாரங்களில் கேட்கப்படுகிறது. போராட்டங்களை நடத்தும்போது போர்முறைத் தந்திரங்களையும் கையாள வேண்டுமல்லவா? சில காலத்திற்குத் தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சியினர் எந்தப்போராட்டத்தையும் நடத்தாமலிருப்பதே சிறந்தது என்று போர் முறைத் தந்திரங்களை ஆராய்ந்து பார்த்தவர்கள் சிலர் கருதுகின்றனர். அவர்கள் சொல்வதிலும் காரணமில்லாமலில்லை. தமிழரசுக் கட்சி போராட்டமெதையும் தொடங்கினால் அதைக்கவனமாகக் காட்டி அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சிபுரியத் தயங்கமாட்டாது. தமிழரசுக் கட்சியினர் போராட்டமெதையும் நடத்தாமல் இருப்பதன்மூலம் அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கத்திற்கு உண்டு பண்ணலாம். அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெற்றால் வேலை நிறுத்தங்களைச் சமாளிக்க முடியாமல் அரசாங்கம் பலம் குன்றிவிடும். அதன் பின் தமிழர்கள் தங்களின் போராட்டங்களை ஆரம்பிப்பதுஇலகுவாசவிருக்கும் என்பது அவர்களின் கருத்தாக விருக்கின்றது.

## பிரதேச சபைகள்.

பிரதேச சபைகள் மசோதாவொன்றைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதாக முன்பு சிலதடவைகளில் எழுதியிருக்கிறேன். பிரதேச சபைகளை நிறுவுவதற்கான நிதிவசதிகள் இவ்வாண்டு வரவு—செலவு திட்டத்தில் செய்யப்பட்டிருப்பதும் வாசகர்கட்கு நினைவிருக்கலாம். காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவால் தயாரிக்கப்பட்ட பிரதேச சபை மசோதாவை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென ஆறு உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றை அரசாங்கம் அமைத்திருக்கிறது. நிர்வாக விஷயங்கள் பற்றி ஆராய்ந்து அவர்கள் அறிக்கை சமர்ப்பிப்பார்கள். வடமாகாண அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. எம். ஸ்ரீகாந்தாவும் அக்குழுவில் அங்கம் வகிக்கிறாராம்.

— அம்பலத்துறைவோன்.



கொலை, கொள்ளை, கற்பழித்தல், பெண்களைச் சிறையிட்டுச் சித்திரவதை செய்தல் முதலிய பயங்கரமான குற்றங்கள் பலவற்றைச் செய்தவன் கரோல் செஸ்மன். 1948 ல் அமெரிக்க நீதிமன்றம் இவனுக்கு மரண தண்டனை விதித்தது. ஆனால் இவனோ, "நான் வாழ வேண்டும்..............நான் நல்ல ஒரு மனிதனாக வாழ்வதற்குச் சர்ந்தர்ப்பம் தாருங்கள்" என்று கதறிக் கதறி வாதாடினான். உலகின் பலபாகங்களிலிருந்தும் இவனுடைய உருக்கமான வேண்டுகோளுக்கு இரங்கிய பல லட்சக் கணக்கானவர்கள் இவனுக்காகப் பரிந்து விண்ணப்பங்கள் அனுப்பினார்கள். பன்னிரண்டு வருடங்களாக அவனுடைய மரணதண்டனை நாள் பின்போடப்பட்டுக்கொண்டே வந்தது..... ......

மிகுந்த பயங்கரமும் ருசிகரமும் நிறைந்த கரோல் செஸ்மனின் வாழ்க்கை வரலாற்றை 'புதினம்' வாசகர்களுக்காக 'ரமணன்' தொகுத்துத் தருகிறார். இந்த இதழின் ஐந்தாம் பக்கத்தில் படியுங்கள்.

## கல்வி மந்திரியின் கோபம்!

### விருந்து ரத்து!

கடந்த 29-10-61 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கற்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வுக் கூடத்தைக் கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மஹ்மூத் திறந்து வைத்தார். அதன் பிறகு ஒரு பொதுக் கூட்டமும், இராப் போசன விருந்தும் நடத்துவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 'வாருங்கள்! பாருங்கள்!! களிகூருங்கள்!!!, என்று தமிழிலும் சிங்களத்திலும் விளம்பரங்கள் அச்சிட்டு பெருந்தொகையான மக்களை வரவழைத்திருந்தார்கள்!

பிற்பகல் கூட்டம் தொடங்கியவுடன் புத்தளம் எம். பி. ஜனாப் எம். எச். எம். நைனாமரைக்கார் பேசினார். பின்னர் வித்தியாலய அதிபரும், மூதூர் இரண்டாவதுஎம். பி. அப்துல் மஜிதும் பேசினார்கள். அதையடுத்துப்பேசிய கற்பிட்டி பட்டின சபைத் தலைவர் பேசியபொழுது ஐக்கிய தேசியக் கட்சியை மிகவும் காரசாரமாகத் தாக்கிப் பேசினார். உடனே புத்தளம் எம். பி. தாம் தொழுகைக்குச் செல்ல வேண்டுமெனக் கூறிக் கொண்டு கூட்டத்தை விட்டு வெளியேறினார். அவரைத் தொடர்ந்து, பாடசாலை மாணவர்களைத் தவிர, கூட்டத்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள் அனைவரும் ஒருவர்பின் ஒருவராக வெளியேறினார்கள். பேச்சை நிறுத்துமாறு கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய கல்வி மந்திரி பலமுறை கேட்டுக் கொண்டும், பட்டின சபைத் தலைவர் பேச்சை நிறுத்தாது போகவே கூட்டம் முடிவதற்குமுன், தலைவர் கூட்டத்தைக் கலைத்துவிட்டு வெளியேறினார். கூட்டத்தில் தலைமை வகித்த கல்விமந்திரி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. சுமார் 600 ரூபா செலவில் ஏற்பாடு செய்யப்பட்ட இராப்போசன விருந்திலும் அவர் கலந்துகொள்ள வில்லை!

பொதுமக்கள் இந்தக் கொண்டாட்டத்துக்குப் பண உதவி செய்தார்கள்; வந்தார்கள்; பார்த்தார்கள்; ஆனால் 'களிகூர' முடியாமல், மனத்தாங்கலோடு திரும்பினார்கள்!

# "பச்சை நாத்திகனாயிருந்தேன் இன்று மாறிவிட்டேன்"

## குன்றக்குடி அடிகளாருக்கு குமுதம் வயிரவன் அஞ்சல்

"கோவிலில் இருக்கும் கல்லுச்சாமியை குப்புறப்போட்டு அதன் மீது துணி துவைக்கலாம்' என்று 1942-ம் ஆண்டில் பெரியார் ஈ. வெ. ரா. வின் படத்தை திறந்து வைத்தபோது பேசியவர், இன்று குன்றக்குடி அடிகளாருக்கு எழுதிய கடிதத்தைக் கீழே பாருங்கள்.

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சந்நிதானத்திற்கு,

வயிரவன் வணக்கம். இந்த இதழ் கல்கண்டில் 'தமிழ்வாணனுக்குத்தந்த பேட்டி' என்ற தலைப்பில் தங்களுடைய பேட்டியைப் படித்தேன். பலமுறை படித்தேன்.

"எத்தனையோ காவி உடைக்காரர்கள் இருந்தார்கள். இருக்கிறார்கள். அவர்களெல்லாம்பொங்கி எழுந்த நாத்திகத்தின் வேகத்தைத் தடுக்கமுடியவில்லை, நாத்திகத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்திய ஒரே ஒரு அருள் தந்தை இன்று அடிகளாரே" என்று உங்களைப் பற்றி எழுதியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை. இது வெறும் புகழ்ச்சிக்காக எழுதப்படுவதில்லை. எடுத்துக் காட்டோடு கூறுகிறேன்.

நான் செட்டிமார் நாட்டைச் சார்ந்தவன். நகரத்தார் வகுப்பிலே உதித்தவன். கண்ணியமானகுடும்பத்திலே பிறந்தவன். காவேரி நதிக்கரையில் கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தவருடைய பிள்ளை நான். அத்தகைய நான், 19 ஆண்டுகளாக பச்சை நாத்திகன். கோவிலில்இருக்கும்கல்லுச்சாமியை குப்புறப்போட்டு அதன் மீது துணிதுவைக்கலாம் என்று பெரியார் ராமசாமி அவர்களின் படத்தைத் திறந்து வைக்கின்ற பொழுது 1942-ல் திருச்சியில் பேசியவன் நான். இன்று என்னுடைய வீட்டிலே பிள்ளையார், லெட்சுமி படம் இருக்கிறது. தினசரி வணங்குகிறேன். வெள்ளிக்கிழமையன்று பூப்போட்டு வணங்குகிறேன். பார்ப்பனர்களைக் காட்டிலும் காவிஉடைதரித்தவர்களிடத்திலே தான் எனக்கு வெறுப்பு அதிகம், ஆனால், இன்று என்னுடைய மேஜைமீது கண்ணாடிக்கு அடியில் தவத்திரு குன்றக்குடி அடிகளாருடைய புகைப்படத்தை (தமிழ்வாணனிடம் இருந்து பெற்றது) வைத்திருக்கிறேன். இவைகளுக்கெல்லாம் காரணம், இந்த மனமாற்றத்திற்குக்காரணம், உங்களை மேடைகளிலே காணநேர்ந்ததும் உங்களுடைய சொற்பொழிவுகளைக் கேட்க நேர்ந்ததுமே. தமிழ்வாணனிடத்தில் முதன் முறையாகஉங்களைப்பற்றி நான் பேசுகின்றபொழுது நான் வெறுக்கின்ற காவி உடைதரித்தவர்களின் கூட்டத்திலே சேர்க்கப்பட வேண்டியவர்கள் அல்ல குன்றக்குடி அடிகளார்; அவர்கள் ஒரு மேதை என்றேன். அதற்குத் தமிழ்வாணன் சொன்னார், 'அவர்கள் ஒரு சாதாரண மேதை அல்ல; நீங்கள் சொல்லுவதுபோல், மிக மிகப் பெரியவர்கள், ஆழம் காணமுடியாதஅறிவுக்கடல்' என்று சொன்னார்.

உங்களுடைய முயற்சி, உங்களுடைய தொண்டு, நன்றாகப் பலன் தருகிறது என்பதற்கு நானே, ஒரு பச்சை நாத்திகனே, மனமாற்றமடைந் திருக்கிறேன் என்பதை நீங்கள் அறிகின்றபொழுது, மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது.

"குன்றக்குடி அடிகளார் விபூதி பூசச் சொன்னால் நான் பூசுவதற்குத்தயார்" என்று பெரியார் ராமசாமி அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். 'அஸ்திவாரமே ஆட்டம் கண்டுவிட்டதே?' என்று நான் அப்படியே அசந்து போய்விட்டேன். அச்செய்தியைப் பத்திரிகையில் பார்த்ததும், நாத்திகத்தின் தந்தை என்று சொல்லப்படுகின்ற பெரியார் ராமசாமி அவர்களே இந்த நிலைக்கு வந்துவிட்ட பொழுது, என்போன்ற இளைஞர்கள்எல்லாம்சர்வ சாதாரணம்.

என்றும் உங்கள் பணிவுள்ள,

— குமுதம் வயிரவன்

## 'மனது நினைச்சு உருகுது!'

மாமி மகள் மருக் கொழுந்தை
மனது நினைச்சு உருகுது
சாமிதயவு பண்ண வேணும்
சதியும் பதியுமாகவே!

* — அவள்

கன்ன மென்ன கண்ணாடியா
கண்ணைக் கூசச் செய்யுது
வன்னச் செம்பு இரண்டு, நெஞ்சின்
வட்டக் கச்சை மீறுது!

*

பச்சைத் தளிர் போலமேனிப்
பகட்டில் நெஞ்சு வேகுது,
இச்சை போலக் கொஞ்சிப் பேச
ஏனோ காலம் ஆகுது!

*

கொஞ்சக் கொஞ்சம் அருகில்வந்தால்
கொவ்வை இதழும் நோகுமா...
பஞ்சைப் போல பாதமெந்தன்
நெஞ்சில் வந்து ஆடவா?

*

தீவாளிக்குத் தீவா ளியும்
திரும்ப வந்து போகுது
கூவாக் குயிலைக் கூடவெனக்குக்
கொஞ்சம் காலம் ஆகுது!

—நாவேந்தன்

நெற்றியிலிருந்தும் விலாவிலிருந்தும் வெள்ளிக்கிழமை தோறும் இரத்தம் கொட்டிய

# ரோமாபுரியின் அதிசய கன்னி!

பின்னால் நடைபெறப் போகும் சம்பவங்களை முன்னாலேயே அறிவிக்கக் கூடிய அதிசய வரம்பெற்ற கத்தோலிக்க கன்னியாஸ்திரியான சகோதரி எலேனா அயலோ என்பவர், அண்மையில் தமது 66-வது வயதில் ரோமாபுரியில் காலமானார்!

இவர் துறவறத்தை மேற்கொண்ட சிலகாலத்தில் — அதாவது 1922-ஆம் ஆண்டு ஒரு அற்புதம் நிகழ்ந்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் இவரது முகத்திலிருந்து இரத்தவியர்வைவழிந்தோடும். இவரது உடலில் ஐந்து பெரிய காயங்கள் தோன்றி, அதிலிருந்து இரத்தம் பீறிட்டுப்பாயும்! (ஏசுக் கிறீஸ்து பூங்காவனத்தில் இரத்த வியர்வை வியர்த்ததும், அவர் சிலுவையில் அறையுண்டபொழுது அவரது உடலில் ஐந்து பெரிய காயங்கள் உண்டானதும், வெள்ளிக்கிழமையன்று அவர் மரணித்ததும் இங்குகுறிப்பிடத்தக்கது!)

"கலாபிரியாவின் திருக்கன்னிகை" என அழைக்கப்பட்ட இவர், "திருப்பாடுகளின் சிறு கன்னியாஸ்திரிகள் சபை" என்ற பெயரில் ஒரு கன்னியர் சபையை ஆரம்பித்தார். இந்த அதிசயவரம்பெற்ற கன்னிகையைத் தரிசிப்பதற்காக, உலகின் பலபாகங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் வந்து கூடினார்கள். யாத்திரீகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரவே, கூட்டத்தைச் சமாளிப்பதற்காக மடத்தைச்சுற்றிப் பந்தோபஸ்து போட வேண்டியதாயிற்று!

வெள்ளிக்கிழமைகளில் சகோதரி எலேனா தன்னையே மறந்த நிலையில் காணப்படுவார். அவர் படிக்காத பல மொழிகளைப் பிழையின்றிப் பேசுவார். கிரேக்க மொழி, அரேபிய மொழி, அரமைக் மொழி முதலியவற்றை அவர் கற்றதே கிடையாது. வெள்ளிக்கிழமைகளில், தன்னை மறந்த நிலையிலிருக்கும் பொழுது அந்த மொழிகளில் அவர் தெளிவாகப் பேசுவார். வெள்ளிக்கிழமையல்லாத மற்ற நாட்களில் அவரால் அந்த மொழிகளைக் கொஞ்சம் கூடப் பேசமுடியாது!

பார்லித் தண்ணீரும், வெறும் பழரசமும் மட்டும்தான் இவரது ஆகாரம். தன்னை மறந்த நிலையில், பல மொழிகளிலும் இவர் பேசும் பொழுது இவரது குரல் ஆண்குரலைப் போல் ஒலிக்குமாம்! ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துநாதர் மரணமான தினமாகிய பெரிய வெள்ளிக்கிழமையன்று, அவரது உடலில் அதிசயமாக ஏற்படும் ஐந்து காயங்களினால் பெரும் அவஸ்தைக்குள்ளாகும் இவர், இறுதியில் சுய அறிவை இழந்துவிடுவார்! அவரது நெற்றியிலிருந்தும், விலாவிலிருந்தும் இரத்தம் கொட்டிக் கொண்டிருக்கும்!

அந்த ஐந்து காயங்களிலிருந்து வடியும் இரத்தத்தையும், அவரது சரீரத்திலுள்ள இரத்தத்தையும் சோதித்த டாக்டர்கள், இரத்தத்தில் வித்தியாசமில்லையெனவும், இரண்டும் ஒரே இனமாகக்காணப்படுவதாகவும் நிருபித்தனர்.

1941-ஆம் ஆண்டு மற்றொரு அதிசயம் நடைபெற்றது. உலகத்தையே நடுநடுங்கச் செய்த எட்வீஸ் முஸோலினிக்கு இத்தாலிய யுத்தத்தில் தோல்வி ஏற்படும் என்றும், பெனிட்டோ முஸோலினிபடு கொலைக்கு உள்ளாவான் எனவும் இந்தக் கன்னிகை முன்னரே அறிவித்த செய்தியை, ரோமாபுரிச் செய்தித்தாள்கள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்திருந்தன!

உண்மைக்கதைகள், உள நூல் கட்டுரைகளுடன்
மனோதத்துவ மாத இதழ்
"உன்னைப் பற்றி"
தமிழில் இத்தகைய பத்திரிகை வேறில்லை
தனிப்பிரதி சதம் 30 ஆண்டுச் சந்தா ரூபா 3-75
92, பாமன்கடை வீதி, கிரிலப்பனைச் சந்தி, கொழும்பு-6

'கரேல் செஸ்மன்' கதை

'ரமணன்'

# முதல் திருட்டு அளித்த வெற்றி!

## மீண்டும்மீண்டும் எதிர்ப்பட்ட சீமாட்டி.

தாய் இறந்த பின்னர் செஸ்மனுக்கு உணவுக்கே பெரும் திண்டாட்டம். தந்தையின் கடனின் பெயரால் கடன்காரர் கடையை ஜப்தி செய்துவிட்டனர். ஆனால் கடையில் உள்ள பொருட்களின் மதிப்பு கடன்காசிலும் பார்க்க அதிகம். அந்தக் கடைக்காரர்தான் செஸ்மனின் முதல்திருட்டுக்கு காரணமாயிருந்தவர். இதை அவன் தனது இறுதிக் காலத்தில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினானாம்.

ஒவ்வொருநாளும் மாலையில் அந்தக் கடைக்காரரிடம் பணம் கேட்பதற்காக செஸ்மான் போவது வழக்கம். அவரும் கடத்திக் கொண்டேயிருந்தார்.

ஒருநாள் செஸ்மன் அவரது கடைக்குப் போயிருந்தான். அவனுக்கென்றால் ஒரேபசி!

இப்பொழுது அவன் வசிப்பது ஸ்டீவின்ஸன் தாத்தா வீட்டில்தான் .அவர் ஏதோ தன்னால் இயன்றதை இவனுக்கு உண்ணக் கொடுப்பார். செஸ்மனின் பாடசாலைப் படிப்பும் நின்றுவிட்டது. அன்று ஸ்டீவின்ஸன் தாத்தாவீட்டில் அவருக்கும் அவரது மகளுக்கும் ஏதோ வாக்குவாதம். அதனால் அன்று சாப்பாட்டிற்குப்பிந்திவிட்டது.

அம்மாவின் கடன் காசைவாங்கி ஏதாவது உண்ணலாமென்றுதான், அவன் இங்கே வந்தான். ஆனால் அவர் அப்பொழுதும் பணம் தரவில்லை. ஏதோ சாக்குச் சொல்லிக்கொண்டே கடையினுள்ளே சென்றார். வெளியிலே செஸ்மன் மட்டும் தனிமையாக நின்றான்.

கடையின் உட்புறத்திற்குச் சென்றவர் திரும்பிவந்து பார்க்கும் பொழுது செஸ்மனையும் காணவில்லை! காசு போடும் மேசையிலுள்ள லாச்சியையும் காணவில்லை. 'லாச்சி'யை போட்டிருந்த இடம் வெறிச்சிட்டுக் கிடந்தது!

கடைக்காரர் தனது பணம் வைக்கும் லாச்சி தொலைந்தவுடன் நேரடியாக ஸ்டீவின்சன் தாத்தா வீட்டிற்கு ஓடினார். அங்கே செஸ்மன் ஏதோவேலை செய்து கொண்டிருந்தான்.

அவன் இவரைக் கண்டு எந்தப் பரபரப்புமடையவில்லை. செஸ்மனின் மூளை திருட்டு வழியில் வேலை பார்க்கத் தொடங்கியது.

கடைக்காரர் ஸ்டீவின்ஸன் தாத்தாவுடன் எவ்வளவோ வாதாடியும் ஸ்டீவின்ஸன், செஸ்மன் களவெடுப்பான் என ஒப்புக்கொண்டால் தானே? இருவருக்கும் வாக்குவாதம் முற்றி இறுதியில் ஸ்டீவின்ஸன் சண்டைக்கே போய்விட்டார்! செஸ்மனும் தனது மூளைத்திறமையுடன் வாயால் போராடி சண்டைக் காரரை அடங்கச் செய்து விட்டான்.

பாவம் அக்கடைக்காரர் பேசாமல் வீடுதிரும்பியது தான் மிச்சம்!

இந்த முதல் திருட்டு செஸ்மனுக்கு பூரணவெற்றியை அளித்தது. இப்பணத்தின் மூலம் அவன் எவ்வளவோ ஆனந்தமடைந்தன். இக்களவு அவனுக்கு களவெடுத்து வாழலாம் என்றநம்பிக்கையையும்ஊட்டியிருக்க வேண்டும். ஆனால் அப்பொழுது மட்டும் அவன் அத் தொழிலைதொடர்ந்து செய்யவில்லை. அதற்கிரண்டு காரணங்களிருந்தன. ஒன்று: மனச்சாட்சி. இரண்டாவது பயம்!

மனச்சாட்சி நிறைந்த செஸ்மான் பிற்காலத்தில் எவ்வளவோ கொலைகளும் கொள்ளைகளும் செய்து தனக்கு விரும்பிய பெண்களையெல்லாம் சூறையாடியதற்குக் காரணமாக இருந்ததும் பெண்கள்தான்! சிறு வயதில்சில பெண்கள் அவனை வஞ்சித்திருக்கிறார்கள்! செஸ்மனின் தாயை காரால் அடித்த சீமாட்டி மீண்டுமொருமுறை அவனைத் துன்புறுத்தினாள்! அச்சம்பவமிதுதான்.

ஒருநாள் செஸ்மன் காற்று வாங்குவதற்கென கடற்கரைக்கு சென்றிருந்தான். அச்சீமாட்டியும் தனது குடும்பத்துடன் வந்திருந்தாள்.

இருவரும் ஒருவரைஒருவர் அடையாளம் கண்டு கொண்டனர். செஸ்மனுக்கு துணிவு அதிகமல்லவா? அவனது கால்கள் அச்சீமாட்டியை நோக்கி நடந்தன. இருவரும் அருகருகே வந்துவிட்டார்கள். அச்சீமாட்டிக்கென்றால் ஒரே ஆச்சர்யம்! இவன் ஏன் தன்னிடம் வருகிறான் என்று!

செஸ்மன் அவளுக்குக் கிட்ட சென்றானே தவிர ஒன்றும் கதைக்கவில்லை. இருவருக்குமிடையில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. அப்பெண்மணியே கதைக்கத் தொடங்கினாள்.

"உனது தாயைத்தானே அன்று நான் காரினால் தட்டினேன்?"

"ஏன் அதற்காக நீ இப்பொழுது நஷ்டஈடு கொடுக்கப் போகிறாயா?"

செஸ்மன் மரியாதை தவறிக் கதைத்தது அப்பெண்மணிக்குகோபத்தை மூட்டியது! உடனடியாக அவள் "அதுசரி! உனது அம்மா மரியாதையாக கதைக்கும் பழக்கத்தை உனக்கேன் சொல்லித்தரவில்லை?" எனக்கேட்டாள்.

இதைக் கேட்டவுடன் செஸ்மனுக்கு வந்த கோபத்திற்கு எல்லையில்லை!

செஸ்மன் சுடச்சுடப் பதில் கொடுத்தான். "எனது அம்மா எனக்கு நல்லவர்களுடன் மரியாதையாக கதைக்கத்தான் பழக்கியிருக்கிறார்!"

"பளார்" இது வேறுஒன்றுமல்ல! செஸ்மனின் கன்னத்திற்கும் அச்சீமாட்டியின் கைக்கும் ஏற்பட்ட சந்திப்பே! செஸ்மன் சரியாகப் பயந்துவிட்டான். அவன் இதை எதிர் பார்க்கவேயில்லை! மீண்டும் அடித்து விடுவாளோ என்ற எண்ணத்தில் அச்சிறுவன் ஓடத் தொடங்கினான். அச்சீமாட்டியுடன் இருந்த உயர்ஜாதி நாய் செஸ்மனை துரத்திச் சென்று அவன்மீது பாய்ந்தது!

நாய்கடித்தபின்னர் செஸ்மன் இரண்டுமாதங்கள் படுக்கையிலிருந்தான். அவனுடன் சேர்ந்து ஸ்டீவின்ஸன் தாத்தாவும் படுக்கையாகக் கிடந்தார். அவருக்கு இருந்தநோய் அதிகரித்துவிட்டது. ஸ்டீவின்ஸன் ஓர் நடுத்தரவகுப்பைச் சேர்ந்தவர்தான். அதனால் வீட்டில் பணமுடை! செஸ்மனை கவனமாகப் பார்ப்பதற்கு வீட்டில் யாருமேயில்லை!

வலிகூடிய நேரங்களில் எல்லாம் அவன் தனது தாயை நினைந்து நினைந்து அழுதான். இறந்துபோன அவளால்என்ன செய்ய முடியும்?

ஸ்டீவின்ஸன் தாத்தாவின் முப்பது வயது நிறைந்த மகள் செஸ்மனை தனது பிள்ளைபோல் பார்க்காவிட்டாலும் அவனை வெறுக்கவில்லை. இது செஸ்மனுக்கோர் மனஆறுதலாக இருந்தது.

அன்று செஸ்மன் கடைக்குச் சென்றபொழுது மீண்டும் அச்சீமாட்டியைக் காணநேரிட்டது. அவள் தனது பணப்பையோடு கடைக்கு வந்திருந்தாள். அவளுடன் வேலைக்காரப் பையனும் வந்திருந்தான். அப்பையனிடம் தனது பணப்பையைக் கொடுத்துவிட்டு யாரிடமோ கதைத்துக் கொண்டிருந்தாள். செஸ்மன் அப்பணப்பையில் கண்வைத்தார்.

எப்படியோ ஏமாற்றிக் கீமாற்றி பணப்பையுடன் நின்ற வேலைக்காரனை ஒரு மூலைக்கழைத்துக் கொண்டு சென்றுவிட்டான் செஸ்மன்! சீமாட்டி கதைச் சுவராஸ்யத்தில் அதைக் கவனிக்கவேயில்லை!

சிலநிமிடங்கள் சென்றன. இருந்தாற்போல் ஐயோ! பணத்தைப் பறித்துக் கொண்டோடுகிறான்! பணத்தைப் பறித்துக் கொண்டோடுகிறான்! "என்ற குரல் ஒரு மூலையிலிருந்து வந்தது. எல்லோரது கண்களும் அப்பக்கம் திரும்பியது. சீமாட்டியின் வேலைக்காரன் பதறிக் கொண்டிருக்க, செஸ்மன் வெகு தூரத்தில் ஓடிக் கொண்டிருந்தான்.

இரண்டு மூன்றுபேர் அவனைத் துரத்திக் கொண்டோடினார்கள்.

(தொடரும்).

நீதிபதிக்கு முன்னால்:

## பலருக்கு உரியவள்

"இது மிகவும் பாரதூரமான குற்றம். எமது பெண்கள் இவரைப்போன்ற காடையர்களின் தொந்தரவுக்குள்ளாகாமல் வசிக்க வசதி செய்து கொடுக்காதுபோனால் நாம் எமது கடமையில் தவறிவிடுவோம்" என்றார் மாஜிஸ்திரேட், எதிரி அல்பேட் சில்வாவைப் பார்த்தபடியே.

பட்டுச் சாரமும் சேட்டும் கோட்டும் அணிந்தவாறு எதிரிக் கூண்டில் நின்று கொண்டிருந்தார் முப்பத்தைந்து வயதுடைய அல்பேட் சில்வா. முப்பது வயது மதிக்கக்கூடிய லீலா பெரேரா சாட்சிக் கூண்டுக்கு அருகில் நின்று கொண்டிருந்தார். சிவத்தமேனி. வசீகரமற்ற முகம். அழகியென்றோ கவர்ச்சியான உடற்கட்டை உடையவரென்றோ அவரைச் சொல்லமுடியாது.

லீலாபெரேராவின் வழக்கறிஞர்: எங்களைக் கெட்ட வார்த்தைகளால் ஏசியதோடுமட்டுமல்லாமல், சாரத்தைக் கிளப்பிக் காட்டி அவமரியாதையும் செய்தாரையா!

அல்பேட் சில்வாவின் வழக்கறிஞர்: அவரை ஏசியது உண்மை. சேலையைத் திறக்கும் பழக்கம் எங்களுக்கில்லை ஐயா! (சிரிப்பு) வீதியில் போய்க் கொண்டிருந்த எங்களை அந்தப் பெண் ஏசியதால் நாங்களும் திருப்பி ஏசினோம் ஐயா!

லீலா பெரேராவின் வழக்கறிஞர்: அவர் எங்களுக்குத் தரவேண்டிய பணத்தைக்கேட்டோமேயல்லாது நாங்கள் எவரையும் ஏசவில்லை.

அல்பேட் சில்வாவின் வழக்கறிஞர்: அவர்களிடம் நாங்கள் எந்தப் பணமும் வாங்கவில்லை ஐயா!

லீலா பெரேரா: நான் விதவை ஐயா! என்னைக் கலியாணம் செய்வதாகச் சொல்லி என்னுடன் சிலகாலம் வந்து வசித்துவிட்டு என்னிடமிருந்த பணத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார் ஐயா!

அல்பேட் சில்வா: நான் அவளுடன் சிலகாலம் வசித்தது மெய். அவளிடம் பலபேர் வந்து போவதைக் கண்டதும் நான் விலகி விட்டேன். நான் அவளின் பணத்தை எடுத்துச் செல்லவில்லை.

மாஜிஸ்திரேட்: உன்னோடு ஒழுங்காக இருக்க உடன்பட்டால் நீ அவளை ஏற்றுக்கொள்வியா?

அல்பேட் சில்வா: (சற்றுத் தயங்கிவிட்டு) ஆம் ஐயா!

மாஜிஸ்திரேட்: இப்போது இருவரும்போய் ஒன்றாக மரியாதையுடன் வாழ முயலுங்கள். வழக்கை மூன்று மாதத்தில் கூப்பிடுகின்றேன். உங்களால் ஒன்றாக வாழ முடியாவிட்டால் வழக்கைப் பின்பு விசாரிப்போம்.

*சட்டத்தின் கண்களில் மண் தூவ*

# பம்பாய் விலைமாதரின் புதிய தந்திரம்!

பம்பாய் நகரில் வசித்துவரும் விலைமாதர்கள் தங்கள் சம்பாத்தியத்தைப் பெருக்குவதற்கும், புதிய ஆசாமிகளை 'அறிமுகம்' செய்து கொள்வதற்கும் ஒரு புதிய முறையைக் கையாண்டு வருகிறார்களாம். அவர்கள் தங்கள் தொழில் முறையை வளர்ப்பதற்கு ஏற்றவையாகத் தெரிவு செய்துள்ள இடங்கள் எவை தெரியுமா? சினிமா தியேட்டர்கள்தான்!

பம்பாய் நகரத்திலுள்ள படமாளிகையில் புதிய படங்கள் திரையிடப்பட்டால், பெண்கள் கூட்டம்தான் அந்தத் தியேட்டர்களை முற்றுகையிட்டுக்கொண்டிருக்குமாம்! அவர்களில் புருஷன் பிள்ளைகளுடன் வந்திருக்கும் பெண்மணிகள் போக வாலைக் குமரிகள்தான் ஏராளமாக இருப்பார்களாம். மனைவியாருடன் படம் பார்க்கவரும் ஆண்களுடன், கல்லூரி மாணவர்களும் படமாளிகையின் முன்னால் கூடிவிடுவார்கள்!

முதன்முதலில் பெண்களுக்கு டிக்கட் கொடுத்தது போக மிகுதியைத்தான் ஆண்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பது சினிமா தியேட்டர்களில் நடைமுறையில் இருந்து வரும் வழக்கம். எனவே, கணவன்மாருடன் வரும் பெண்கள் கணவருக்கும் குழந்தைகளுக்குமாகச் சேர்த்து தாங்களே டிக்கட் எடுத்து விடுவார்கள். கல்யாணமாகாதவர்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தால் அவர்களுக்கும் டிக்கட் கிடைத்துவிடும். ஆனால் டிக்கட் கிடைக்குமா கிடைக்காதா என்பதைக் கடைசிவரை காத்திருந்து நிர்ணயிக்கவேண்டியவர்கள் வாலிபர்கள்தான்!

இப்படியாகத் தடுமாறும் வாலிபர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள், பெண்கள் கூட்டத்தோடு கூட்டமாகப் பட்டாம் பூச்சிகளைப்போல் பகட்டான உடையணிந்து சுற்றித் திரியும் விலைமாதர்கள்! அவசரத்திற்கு உதவிசெய்யும் 'ஆபத் பாந்தவர்,களான அந்தப் பெண்களின் துணையை நாடிப் பல வாலிபர்களும் காத்துக் கொண்டிருப்பார்களாம்! வாலிபன், இரண்டு டிக்கட்டுகளுக்கான பணத்தை ஒரு பெண்ணின் கையில் திணித்து விடுவான். அவளும் இரண்டு டிக்கட்டுகளை மிகச் சுலபமாக வாங்கி விடுவாள். ஒன்று அந்த வாலிபனுக்கு, மற்றது அவளுக்கு. இருவரும் தியேட்டருக்குள் நுழைந்து அடுத்தடுத்த ஆசனங்களில் கணவன் மனைவியைப்போல் அமர்ந்து விடுவார்கள்.

படம் பார்க்கும் பொழுதே அந்த வாலிபனுடன் பேச வேண்டியதையெல்லாம் பேசி அவனை 'ஒழுங்கு படுத்தி' விடுவாள் அந்தப் பெண். படம் முடிந்தவுடன் அவர்களுக்காக வெளியில் தயாராகக் காத்துக் கொண்டிருக்கும் டாக்ஸியில் ஏறிப் போகவேண்டிய இடத்துக்குப் போவார்களாம், அந்த 'இளம் ஜோடிகள்!'

அன்று அந்தப் பெண்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் ஒரு பங்கைக் கொடுத்துவிடுவதென்று டாக்ஸி டிரைவர்களுடன் முன் கூட்டியே பேசி முடிவு செய்து விடுவார்களாம் அந்தப் பெண்கள்!

## சிறைச்சாலை அதிகாரிக்கு 2 வருட சிறைத் தண்டனை!

இங்கிலாந்திலுள்ள லேன்ஸ் சிறைச்சாலையில் கணக்காளராகக் கடமையாற்றிவந்த 38 வயதுடைய ஜோன் ஹரிஸ் என்பவருக்கு, தாம் கடமையாற்றிய அதே சிறைச்சாலையில் இரண்டு வருடச் சிறைத் தண்டனை அளிக்குமாறு கடந்த செப்டம்பர் மாதம் 27-ம் திகதி புதன்கிழமையன்று பிரெஸ்டன் நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்!

சிறையில் அடைபட்டிருக்கும் குற்றவாளிகள், சிறைச்சாலையில் உழைக்கும் பணத்தில் பன்னிரண்டு பவுன்வீதம் தங்கள் மனைவிமாருக்கோ, அல்லது தாய் தந்தையருக்கோ அனுப்பலாமென்ற சட்டம் இருந்து வருகிறது. அந்தப் பணத்தை வசூலித்து, குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டியதுதான் ஹரிஸின் வேலை. ஆனால் அவர் அந்தப் பணத்தை குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பி வைக்காமல், கடந்த ஓராண்டு காலமாகத் தாமே அனுபவித்த குற்றத்துக்காகத்தான் மேற்கூறிய தண்டனை அவருக்கு விதிக்கப் பட்டுள்ளது.

தீர்ப்பு வழங்கிய நீதிபதி, "சிறைச்சாலையில் ஹரிஸ் பெற்று வந்த ஊதியமும் காணாதென்று சிறைச்சாலைக் குற்றவாளிகள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்திற்கு மோசடி செய்த குற்றத்திற்காக இதே சிறையில் அடைக்கவேண்டுமென்று தீர்ப்பு வழங்குகிறேன்" என்றுகுறிப்பிட்டார்.

## எழுத்தாளர் மோசடி

இலங்கையிலிருந்து சென்னைக்குச் சென்று வேலை தேட முயற்சித்த இரு இளைஞர்கள், இலங்கை எழுத்தாளர்களின் பெயர்களைக் கூறிக்கொண்டு சென்னை நகரிலுள்ள சினிமாஸ்டுடியோக்களைச்சுற்றி வந்த விஷயம் அம்பலமாகியுள்ளது!

கொழும்பிலிருந்து சென்னைக்குச் சென்ற இரண்டு இளைஞர்களில் ஒருவர் தம்மை 'ஜீவா' என்றும், மற்றவர் 'கலாதர்' என்றும் பெயரை மாற்றிக்கொண்டு சினிமாஸ்டுடியோக்களில் வேலைதேடி அலைந்தனர். வேலையொன்றும் கிடைக்காதுபோகவே, தான் ஒரு இலங்கை எழுத்தாளரென்றும், ஜோ. ஏ. எம். தாஸ் என்பதுதான் தனது புனைபெயர் என்றும் கூறிக்கொண்டு, திரு. தாஸ் எழுதிய சில புத்தகங்களை பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்களிடம் காட்டி, சினிமாவிற்குக் கதைவசனம் எழுதத் தமக்கொரு சந்தர்ப்பமளிக்குமாறு கேட்டாராம் இவர்களில் ஒருவர்! விஷயமறிந்த சில நண்பர்கள் சென்னையிலிருந்து இச்செய்தியைத் திரு. தாஸுக்கு அறிவித்துள்ளனர்!

## எழுந்து வராத காரணம்!

விம்பிள்டனிலுள்ள ஒரு நீதிமன்றத்தின் தாழ்வாரத்தில், ஒரு ஆசனத்தில் ஒருபெண் உட்கார்ந்திருந்தாள். அவள் போலிசாரால் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டு, கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தாள். 'கோர்ட்டின் அறிவிப்பாளர் அவள் பெயரை அறிவித்தபொழுது அவள் ஆசனத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. —காரணம் அவள் ஆசனத்தை விட்டு எழுந்திருக்க முடியவில்லை!

அவள் அமர்ந்திருந்த ஆசனத்தில் பூசப்பட்டிருந்த 'வார்னிஷ்' இளகி அவளது உடையுடன் ஒட்டிக்கொண்டிருந்ததே அவள் எழுந்திருக்க முடியாததற்குக்காரணம். இரண்டு போலிஸ்காரர்கள் மிகுந்த பிரயாசப்பட்டு, அவளை ஆசனத்தை விட்டு அகற்ற வேண்டியதாயிற்று!

# இத்தால்— சகலரும் அறிவது!

### இது 'பொடி' விஷயமா?

கடந்த வாரம் இரவு சுமார் 7-30 மணியளவில் நான் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்குச் சென்று, அங்கு ஒரு நோயாளியுடன் தங்கியிருப்பவருக்கு உணவு கொடுப்பதற்காக உள்ளே நுழைந்தபோது, ஆஸ்பத்திரி வாயில் காப்பாளர் என்னைத் தடை செய்தார் நான் அவரிடம் விஷயத்தை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கண்டிப்பாக அவர் மறுத்துவிட்டார். சற்றுநேரத்துக்கு பின் என்னை நோக்கி, "மூக்குப்பொடி வாங்கிவிட்டு வருவதற்காக சைக்கிளைத் தரமுடியுமா'' என்று கேட்டார். முன்பின் அறிமுகமில்லாத அவரிடம் நான் எப்படி என் சைக்கிளைக் கொடுப்பேன்? மறுத்துவிட்டேன். உடனே அவர், ''பொடி வாங்க சைக்கிள் தராவிட்டால் உள்ளே விடமாட்டேன்" என்று சொல்லி அங்கேயே உட்கார்ந்துவிட்டார். எப்படியிருக்கிறது விஷயம்?

யாழ்ப்பாணம், ஆர். குணராயன்.

### சொல்லாமல் தை!

பல வருடங்களாக கட்டுக்கோப்புடன் ஒரே அமைப்பின் கீழ் தமிழரசுக் கட்சி செயலாற்றி வந்திருக்கிறது. ஆயிரக் கணக்கானோர் தமிழினத்தின் விமோசனவிடுதலைக்காகச் செயலாற்றியிருக்கிறார்கள். இதை எவரும் மறந்துவிடுவதற்கில்லை. ஆனால், (கட்சியிலுள்ள) கிழிசல்களை யாரிடமும் சொல்லாது தைத்திருக்கலாம்! ''மட்டக்களப்புக்கே அவமானம்'' என்று ஒருவரும்; ''செனட்டர் பதவிக்காகக் கொட்டாவி விடவில்லை'' என்று இன்னொருவரும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு விநியோகித்திருக்கிறார்கள். மட்டக்களப்பு மக்களின் வழிகாட்டிகளாக இருந்த இவர்கள் இச் செயலில் ஈடுபட்டது போற்றத்தக்கதல்ல

மட்டக்களப்பு, செழியன் ஜே. பேரின்பநாயகம்.

### 'யான் நோக்க நிலம் நோக்கும்'

இந்தப் பெண்களே விசித்திரப் பிறவிகள் தான். நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு தெருவில் வருகிறார்கள். ஆண்களைப் பார்த்துவிட்டாலோ, அப்படியே 'ஷாக்' அடித்தவர்கள் மாதிரி தலையைக் கீழே போடுகிறார்கள். நாம் சற்றுப் பார்வையைத் திருப்பிவிட்டால் 'கடைக்கண் பார்வை' பார்க்கிறார்கள். தைரியமிருந்தால் நேரே நிமிர்ந்து பார்க்கலாமே?

யாழ்ப்பாணம். 'கும்கும்'

### கசிப்பா?—சகிப்பா?

கசிப்பு அருந்திய மாணவர்களைப்பற்றிக் கடந்த சில வாரங்களுக்கு முன் புதினப் பத்திரிகையில் வாசித்தறிந்தேன். ஆனால் அதே நேரத்தில் ஆசிரியர்களும் மதுவருந்திப் பாடசாலைகளுக்கு வருகிறார்களே! இதை மாணவர்கள் சகிப்பார்களா? பாடசாலை ஒரு புனிதமான இடம் என்பதை உணர்ந்து ஆசிரியர்கள் நடந்தால், மாணவர்களும் அவர்களைப் பின்பற்றி நடப்பார்கள். அல்லது—

''தள்ளாடி ஆடிவரும் வாத்தியாரே!
தரித்திரமாம் சரித்திரம்தான் பாடமையா?
எள்ளளவும் எங்களுக்கு விளங்கவில்லை
எடுத்துரைக்கத் தாமதமேன் வாத்தியாரே!

கள்வாடை அடிக்குதையோ வாத்தியாரே!
கரலியட்ட பண்டாரன் கதையைச் சொல்லும்.
வெள்ளணத்தான் அடித்தீரோ வெறுவயிற்றில்
துள்ளிவிழ வந்தீரோ வாத்தியாரே!"

என்றுதான் பாடுவார்கள்.

நெடுந்தீவு, செ. மகேந்திரன்.

### மலருக்கு மாலை

முத்தமிழும் சேர்ந்த தித்திக்கும் புதினமலர்
சத்தம் எதுவுமின்றி தத்திவரக் கண்டேனே
புத்தப் புதுமலரை மெத்த விருப்புடனே!
சித்தம் மகிழ்ந்திடவே வாங்கி முகர்ந்தேனே!

நெடுந்தீவு, செ. மகேஸ்

சிறப்பிதழின் முதலாம் பக்கம் ஒரு மலருக்குரிய சோபையுடன் விளங்குகிறது. கதையரங்கம், கவியரங்கம் எல்லாம் வெகுஜோர்! சேலை அலங்காரக் காட்சியைத் தந்த 'ரமணி' பாராட்டுக்குரியவர்.

கொழும்பு, ஜே. ஆர். பெஞ்சமின்

### இலங்கையிலுள்ள

# 254 சினிமா தியேட்டர்களிலும் சிங்களப் படங்களாகவே திரையிட முடியுமா?

## தமிழ்ப் படங்களைக் கைவிட்டால் தியேட்டர்களை இழுத்துப் பூட்டவேண்டியதுதான்!

இலங்கை மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா இதுவரையில்வெளிவந்துள்ள சிங்களப்படங்களில் மூன்றுதான் நல்லவை என்று குறிப்பிடுகிருர்! இன்று இலங்கையில் சுமார் 260 தியேட்டர்களும் ஒரு சில டூரிங் சினிமாக்களும் இருக்கின்றன. இவற்றில் கொழும்புநகரில் உள்ள தியேட்டர்களில் ஐந்து நிரந்தரமாக ஆங்கிலப் படங்களையே காட்டுபவை ஒரு தியேட்டர் ஹிந்திப் படங்களை மட்டுமே காட்டுகிறது. மற்றவையெல்லாம் பெருமளவிற்குத் தமிழ்ப் படங்களையும் ஒரு சிறு அளவுக்கு சிங்களப் படங்களையுமே ஓட்டிக்கொண்டிருக்கின்றன. தற்சமயம் இலங்கையிலுள்ள ஸ்டுடியோ வசதிகளைக்கொண்டு வருஷம் ஒன்றுக்கு சுமார் ஏழெட்டு சிங்களப்படங்களையே தயாரிக்க முடியும். மேற்கூறிய 254 தியேட்டர்களும்இதே டூரிங் சினிமாக்களும் இந்த ஏழெட்டு சிங்களப் படங்களையே நம்பி தொழில் நடத்திவிட முடியுமா? படம் ஒன்றுக்கு 20 பிரதிகள் எடுத்தாலும் இந்தத் தியேட்டர்களுக்கு சராசரி இரண்டுவார வேலை கொடுக்கக்கூட சிங்களப் படங்களால் முடியாது! மற்ற நாட்களில் தியேட்டரை மூடி வைத்துவிட முடியுமா? எனவே தமிழ்ப் படங்களை ஓட்டுவதைத் தவிர வேறுவழியேஇல்லை. அப்பட்டமாகச் சொல்லப்போனுல், இலங்கைத் தியேட்டர் தொழில் தென்னிந்திய தமிழ்ப் படங்களை நம்பித்தான் உயிர் வாழ்கிறது!

இலங்கை சினிமாத் தியேட்டர்களின் கொள்ளை வருமானத்தைக் கண்ட இலங்கை அரசுக்கு நாவில் ஜலம் ஊறுகிறது. தமிழ்ப் பட விநியோகத்தை தேசிய உடமையாக்கித் தமிழ்ப் படங்களை இன்னும் குறைந்த விலைக்கே வாங்கி, நிறைய லாபம் அடையலாம் என்று அது நினைக்கிறது.

"இந்த அநீதியை ஒழிக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. தென்னிந்திய பிலிம் வர்த்தகசபை டெல்லி அரசாங்க உதவியுடன் இலங்கையில் தமிழ்ப் படங்களை விநியோகம் செய்ய ஒரு கிளையை நிறுவவேண்டும். சட்ட உதவிகொண்டு பட முதலாளிகள் இலங்கை உரிமையை நேரடியாக விற்பதைத் தடைசெய்து, இந்தக் கிளை ஸ்தாபனத்தின் மூலமாகவே விற்பனை செய்வதைக் கட்டாயமாக்கவேண்டும்.

அமெரிக்க ஸ்தாபனங்களான டுவென்டியத் செஞ்சுரி பாக்ஸ், எம். ஜி. எம். முதலியவை உலகெங்கிலும் தங்கள் படங்களை விநியோகிக்கின்றன. ரஷ்ய ஸ்தாபனமாகிய ஸோவெக்ஸ் போர்ட்பிலிம், இந்தியாவிலும்—ஏன், இலங்கையிலும் கூட தன் படங்களைக் கிளை நிறுவியே விநியோகிக்கிறது. அப்படியிருக்க நமது படங்களை நாமே இலங்கையில் விநியோகம் செய்ய விரும்புவதில் என்ன தவறு?" என்று திரு. கே. எஸ். வி. ராகவன் என்ற பிரமுகர் இந்தியப் பத்திரிகை ஒன்றில் காரசாரமாக ஒரு கட்டுரை தீட்டியுள்ளார்.

### காந்தியடிகளின் வாழ்க்கைப் படம்.

மார்க் ரொப்ஸன் என்ற பிரபல ஆங்கிலப் படத்தயாரிப்பாளர், பாரதத்தின் தந்தை மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் விதத்தில், "ஸெவன் டேய்ஸ் அட்ராம்பூர்' (ராம்பூரில் ஏழு நாட்கள்) என்றபெயரில் திரைப்படம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்.

டியன்ஞபேகர் என்ற பிரபல நடிகர் நடிக்கவிருக்கும் இப்படத்தில், காந்தியடிகளைச் சுட்டுக் கொன்ற கிராதகன், விநாயக் கோட்ஸேயாக ஹோர்ஸ்ட் புச்ஹோல்ஸ் என்ற ஜெர்மன் நடிகர் நடிக்கவிருக்கிருராம்!



பரத நாட்டியம், புராதன இந்தியத்தமிழ்க் கலை. பிற நாட்டினரையும் கவர்ந்து, ஆசை யூட்டி இந்தியக் கலைத்திறனுக்குத் தலை கிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் மாபெரும் கலை. விஞ்ஞான, இயந்திர அறிவு வளர்ச்சியிலே உலகில் உச்ச நிலை எய்திவிட்ட மேனுட்டு மேதைகளைக் கூட நமது நடராஜர் சிலை எளிதில் கவர்ந்துவிடுகின்றது! இன்று குடும்பக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் பாடமாகக் கற்பிக்கப்படும் அளவிற்கு நாகரிக அம்சங்களில் ஒன்ருய்த் திகழும் இக்கலை நாகரீகச் சுழலிலே அடிக்கடி பாதிக்கப்பட்டே வந்திருக்கிறது. இயற்கையின் நியதியே அதுதானே? நேற்றுக் கர்நாடகமாகத் தோன்றியவை, இன்று நவநாகரீகமாய்க் காட்சியளித்து, நாளை நினைவாகி, பின் கனவாகிக் கற்பனையாகிக் கதையாகிக் காவியமாக மாறிவிடலாம்!

பரத முனிவரால் வகுக்கப்பட்ட கலையாதலால் பரதக்கலை என்று சிலர் கூறுகிருர்கள். சகுந்தலையின் மகன் பரதன் அரசாண்ட பரத கண்டத்தின் கலையாதலால் 'பரதம்' என்ற பெயர் வழங்கியதாகவும் சிலர் கொள்கின்றனர். பாவ, ராக, தாளங்களின் சேர்க்கையான கலையாதலால், இவற்றின் முதல் எழுத்துக்களைச் சேர்த்து இப்பெயர் வழங்குவதாகவும் சிலர் சொல்லுகிருர்கள்.

எது எப்படியிருந்தாலும், ஒன்று மட்டும் நிச்சயம். இந்த அமர கலை, தேக ஆரோக்கியமும், மனோ வலியும், அறிவுவளர்ச்சியும் அளிக்கக்கூடிய சிறந்த சாதனமாக அமைகிறது. இதை உணர்ந்துதான், திர்க்க தரிசியான பாரதியார் "பாட்டும் செய்யுளும் கோத்திடுவீரே! பரதநாட்டியக் கூத்திடுவீரே!!" என்று எழுதினுரோ?

காலைத் தூக்கி நின்ருடும் தோற்றத்தில், பத்மினி பிரியதர்சினியின் அபிநயத்தை மேலேயுள்ள படத்தில் காணலாம்!

Registered a newpaper at the G. P. O.

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

## “அந்தக் காலத்திலே நான் யாழ்ப்பாணத்தில் குடித்த கள் அமிர்தம்! இப்போது கொழும்பில் குடிப்பதோ கொடிய விஷம்!......”

# பழக்க தோஷத்தால் ‘குடி’ப்பவரின் பிரலாபம்!

கசிப்பு என்ற மதுவரக்கன் இலங்கையெங்கிலும் பரவிக் கோர தாண்டவமாடுவதைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் பெருமுயற்சியெடுத்துவந்தாலும், பூரணமாக அதைத் தடைசெய்ய முடியவில்லை. நாட்டின் பல பாகங்களிலும் தவறணைகள் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருவதாகச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன!

சில தினங்களுக்கு முன் நாவலப்பிட்டியைச் சேர்ந்த பவகாமம் என்னுமிடத்தில் கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருக்கும் பொழுதே, நாவலப்பிட்டி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஏ. எம். ஜயசிங்கா, தன்னுடன் ஒரு பொலிஸ் கோஷ்டியையும் அழைத்துச் சென்று, எச். ஏ.வில்லியம் என்பவரைக் கைது செய்திருக்கிறார். அத்தோடு, கசிப்பு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களான கஞ்சா, பழைய பாட்டரிகள் மற்றும் பலவகை அபாயகரமான மூலிகை வகைகளையும் பொலீசார் கைப்பற்றியிருக்கின்றனர். தற்போது கசிப்பு உற்பத்தி செய்யும் இடமாகப் பயன்படுத்தப்பட்ட அந்த இடம், முன்னர் கள்ளுக்குதமாக இருந்ததாம்!

இரண்டு தினங்களுக்கு முன் கசிப்புத் தொல்லைகளை ஒழிக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுவதுபற்றி ஆலோசனை செய்வதற்கென உள்நாட்டு அமைச்சு மகாநாடு ஒன்றைக்கூட்டியது: சாராய விலையை மேலும் குறைக்கும் விஷயமாகவும், கல்லோயா ‘ரம்’ விற்கப்படவேண்டிய திட்டவட்டமான விலையை நிர்ணயிப்பதுமே இந்த மகா நாட்டின் முக்கிய நோக்கம்.

உள்நாட்டு உற்பத்தியான கள்ளை மாத்திரமே குடித்து வரும் ஒரு நபர், நமது நிருபரிடம் இதுபற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டார்—

“அந்தக்காலத்தில் நான் யாழ்ப்பாணத்தில் குடித்த கள்ளுக்கும், இப்பொழுது நான் கொழும்பில் குடித்துவரும் கள்ளுக்கும் பெருத்த வேற்றுமை இருக்கிறது. சுகாதாரத்திற்குக் கெடுதி விளைவிக்கும் கசிப்பைத் தடைசெய்வதோடுமட்டும் அரசாங்கம் நின்றுவிடக்கூடாது. ஒரு பானை கள்ளிலிருந்து ஒன்பது பானை கள்ளை உற்பத்தி செய்யும் யுக்தியைக் கள் விற்பனையாளர்கள் கையாளுகிறார்கள். அதாவது ஒரு பானை கள்ளில் தண்ணீரையும், சக்கரீனையும் கலந்து, அதன் அடியில் உருளைக் கிழங்குகளையும் ஒரு சதம் போன்ற செம்பு நாணயங்களையும் அமிழ்த்தி விடுகிறார்கள்!

இதனால் உண்டாகும் வேகத்தில் பானையில் நொங்கும் நுரையுமாகப் பொங்கி வழியும் அந்தப் ‘போலிக் கள்ளை’ என்போன்றபலர் ‘பழக்க தோஷத்தால்’ வாங்கிக் குடிக்க வேண்டியவராகத்தானிருக்கிறார்கள். கள்ளென்றபெயரால் கசிப்பை விட மோசமான திராவகத்தைச் செய்து விற்றுப் பணம்சம்பாதிக்கும் கயவர்களைப் பிடிப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் ” என்று மிகவும் மன வருத்தத்துடன் அவர் சொன்னார்.

புதினம் ‘தீபாவளீச் சேலை அலங்காரப் போட்டி”க்கு நாம் எதிர்பார்த்த அளவுக்கு கவர்ச்சிகரமான போட்டோக்கள் வந்து சேரவில்லை. ஓரளவு நன்றாக இருந்த படங்களும் புளொக் செய்து அச்சிடக்கூடியதாகத் தெளிவாக அமையவில்லை. அதனால் குறித்த போட்டியில் யாருக்கும் பரிசுகள் வழங்கபடவில்லை. போட்டிக்காக அனுப்பிய போட்டோக்களைத் திரும்பப்பெற விரும்புவோர் 17-11-61 க்கு முன் போதிய முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

—ஆசிரியர், ‘புதினம்.’


# 5-ம் வகுப்பு - வினாப்பத்திரங்கள்.

பரீட்சையில் வருவனபோன்ற மாதிரி வினாப்பத்திரங்களை இந்த மூன்றும் தவணைக் காலத்தில் மாணவர் செய்து பழகுவதனால், பரீட்சையில் மிக இலகுவாக அவர்கள் தேறமுடிகிறது, தமிழ் (பாஷை), கணிதம், சூழல், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தனித் தனியாக புத்தக உருவில் இவ் வினாப்பத்திரங்கள் உள்ளன. **விலைகள் மிகக்குறைவு.**

(1) வினாப்பத்திரம் - தமிழ் (பாஷை) ச. 60 (3) வினாப்பத்திரம் - சூழல் ச. 60

(2) வினாப்பத்திரம் - கணிதம் ச. 60 (4) வினாப்பத்திரம் - ஆங்கிலம் ச. 60

(புதிய முறைப்படி திருத்தியபதிப்பு)

எழுதியவர்: வே. க. கந்தசாமி (புதுமைலோலன்)

இலங்கை எங்குமுள்ள அநேக பாடசாலைகளில் இவ்வினாப் பத்திரங்கள் வருடந்தோறும் உபயோகப்பட்டு வருகின்றன. நீங்கள் இதுவரை உபயோகிக்காவிட்டால் உடனே எழுதுங்கள்.

(தொகையாக வாங்குவோருக்கு தகுந்த கழிவு உண்டு)

## ஆனந்தா அச்சகம் - புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348; தந்தி: ‘அச்சகம்’